# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 17/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | :ஜெயலட்சுமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th January 2026.

1 ம் **எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டை கவனித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். மற்ற எதிரிகள் பேச்சிமுத்து மற்றும் கருத்தப்பாண்டி ஆகியோரை தெரியும். நான் மலையான்குளத்தில் குடியிருந்து வந்தபோதுஎங்கள் வீட்டில் ஒரு நாய் இருந்தது. எங்கள் பக்கத்து வீட்டில் குடியிருந்த எதிரி கடற்கரை எங்கள் நாய்க்கு கருவாட்டில் விஷம் வைத்துகொடுத்துவிட்டார். நாய் இறந்துபோனதால் நான் எதிரி கடற்கரையை சத்தம் போட்டேன். 02.11.2013 ம் தேதி இரவு 1 மணியளவில் ஆஜர் எதிரி, மற்ற எதிரிகளான கருத்தப்பாண்டி, பேச்சிமுத்துவை கூட்டிவந்தார். எதிரிகள் வந்து எங்கள் வீட்டு கதவை தட்டினார்கள். கதவை திறந்து என் கணவர் வெளியே வந்தவுடன் கடற்கரை என் கணவரின் வலதுபுற தாடையில் இரும்பு சூரியால் குத்திவிட்டார். அதை நான் தடுக்கும்போது எதிரி என் இடதுகை சுண்டுவிரலின் கீழ்பகுதியில் காயம் ஏற்பட்டது. அதில் 4 தையல்கள் போடப்பட்டது.

எதிரி கருத்தப்பாண்டி ராடு கம்பியால் என் தலையின் இடதுபக்கத்தில் அடித்தார். அதனால் எனக்கு காயம் ஏற்பட்டு 11 தையல்கள் போடப்பட்டன. எதிரி பேச்சிமுத்து என் இடுப்பில் கம்பியால் அடித்தார். என் கணவர் என்னை இருசக்கரவாகனத்தில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தார். அங்கு வந்த போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் மருத்துவமனையில் 10 நாட்களுக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எதிரிகள் என்னை அடிக்கும்போது கெட்ட வார்த்தைகள் பேசி "என்னைக்கிருந்தாலும் உங்கள் சாவு என்கையில்தான் " என்று மிரட்டினார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

1 ம் **எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய தகவலைத்தான் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் அவ்வாறுதான் கூறினேன். எதிரி பேச்சிமுத்துதான் என் தலையில் அடித்தார். பதட்டத்தில் எதிரி கருத்தப்பாண்டி அடித்ததாக சொல்லிவிட்டேன். என்னிடம் போலீசார் எங்கு வைத்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் திருநெல்வேலி GH ல் வைத்து வாங்கினார்கள். நான் புகார் வாக்குமூலம் அளித்தேனா அல்லது புகார் மனு அளித்தேனா என்றால் புகார் வாக்குமூலம் அளித்தேன். நான் புகார் வாக்குமூலம் அளித்தபோது என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் என் கணவர் மட்டும் இருந்தார். எதிரியின் தோப்பும், எங்கள் தோப்பும் அருகில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளுக்கு முந்தைய நாள் எங்களுக்கும், எதிரிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரி எங்கள் மீது புகார் அளித்தார் என்றும், அதன் அடிப்படையில் எனக்கும், என் கணவருக்கும் எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நாங்களும், எதிரியும் குத்தகை எடுத்து விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் குத்தகைக்கு எடுத்துள்ள இடம் யாருடையது என்றால் மாரியப்பன் என்பவருடையது. சம்பவம் பற்றி மேற்படி மாரியப்பனுக்கு தெரியுமா என்றால் சம்பவம் நடந்ததற்கு மறுநாள் காலை நான் மாரியப்பனிடம் கூறினேன். சம்பவம் நடந்த சமயத்தில் வேறு எந்த நபர்களும் அங்கு இல்லை என்றால்

சரிதான். சம்பவம் நடந்த பிறகு உடனே நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேனா என்றால் இல்லை. சுமார் 1 மணிநேரம் கழித்து சென்றேன். நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரி எனக்கும், என் கணவருக்கும் எதிராக கொடுத்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்கு நாங்கள் இருசக்கரவாகனத்தில் சென்றபோது கீழே விழுந்து எனக்கு காயங்கள் ஏற்பட்டதை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக பொய்யாக வாக்குமூலம் அளித்தேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 17/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | :சரவணன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th January 2026.

1 ம் **எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் சிதம்பராபுரம். அ.சா.2 எனது மனைவி. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். மற்ற எதிரிகள் பேச்சிமுத்து மற்றும் கருத்தப்பாண்டி ஆகியோரை தெரியும். சம்பவம் நடப்பதற்கு 3 நாட்களுக்கு முன்பு என்னுடைய நாய் எதிரி கடற்கரை கருவாட்டில் விஷம் வைத்ததால் இறந்துபோனது. எதற்கு என்னுடைய நாயை கொன்றீர்கள் என்று கேட்டதற்கு எதிரிக்கும், எனக்கும் அப்போது வாக்குவாதம் ஏற்பட்டது. 02.11.2013 ம் தேதி இரவு 1 மணியளவில் ஆஜர் எதிரி மற்றும் பேச்சிமுத்து, கருத்தப்பாண்டி ஆகியோர்கள் எங்கள் வீட்டுக்கதவை தட்டினார்கள். கதவை தட்டியவுடன் நான் யார் என்று கேட்டேன். அப்போது எதிரி கடற்கரை நாயை நான் கொன்றேன் என்று எப்படி சொல்கிறாய் என்று சொல்லி சூரிகத்தியால் எனது இடது தாடையில் குத்தினார். அப்போது என் மனைவி அந்த சூரியை பிடித்ததால் அவருக்கு இடது கை

சுண்டுவிரலுக்கு அடியில் காயம் ஏற்பட்டது. எதிரி பேச்சிமுத்து என் மனைவியின் தலையில் அடித்ததால் என் மனைவியின் தலையில் 11 தையல்கள் போடப்பட்டன. எதிரி கடற்கரை சூரியால் எனது மனைவியின் இடதுபக்க இடுப்பில் அடித்தார். அதில் காயம் ஏற்பட்டு தழும்பு உள்ளது. பின்னர் என் மனைவியை நான் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தேன். சம்பவத்தின்போது எதிரிகள் என்னை கொல்லாமல் விடமாட்டேன் என பேசினார்கள். மேல்சிகிச்சைக்காக எனது மனைவி திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார். அங்கு வந்த போலீசார் எனது மனைவியிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். எனது மனைவி 13 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். நான் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் என்னை திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தார்கள். எந்த தேதியில் எத்தனை மணிக்கு போலீசார்என்னை விசாரித்தார்கள் என்றால் 02.11.2013 ம் தேதியில் காலை 8 மணிக்கு என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எங்களுக்கும் எதிரிக்கும் இடையில் ஏற்கனவே பிரச்சனை உண்டு என்றால் சரிதான். நாங்களும், எதிரியும் வேலை செய்யும் தோட்டம் அருகருகே உள்ளது என்றால் சரிதான். எதிரியை நானும், என் மனைவியும் கெட்டவார்த்தைகள் பேசி அடித்ததாக கூறி எங்களுக்கு எதிராக சம்பவம் நடைபெறுவதற்கு முந்தைய நாள் புகார் அளித்தார் என்றாலும், அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரி எங்களுக்கு எதிராக அளித்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்கு நானும், என் மனைவியும் இருசக்கரவாகனத்தில் இரவில் சென்றபோது கீழே விழுந்து எங்களுக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக பொய்யான வாக்குமூலம் அளித்து அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி கருவாட்டில் விஷம் வைத்து எனது நாயை கொன்றார் என்று நான் முதல்விசாரணையில் கூறியுள்ள விபரங்களை

பொறுத்து புகார் எதுவும் காவல்நிலையத்தில் அளித்தேனா என்றால் இல்லை. அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறாததால்தான் நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த சமயத்தில் அந்த இடத்தில் வேறு யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. நாங்கள் குத்தகைக்கு எடுத்த தோட்டத்தில்தான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் குடியிருந்தோம் என்றால் சரிதான். சம்பவம் பற்றி அந்த தோட்டத்தின் உரிமையாளருக்கு எப்போது தெரியும் என்றால் சம்பவம் நடந்ததற்கு மறுநாள் சம்பவம் பற்றி அந்த உரிமையாளரிடம் நாங்கள் கூறினோம். எங்கள் நாய்க்கு எதிரி விஷம் வைத்த விபரம் தோட்டத்தின் உரிமையாளருக்கு தெரியுமா என்றால் தெரியும். நாய்க்கு எதிரி விஷம் வைத்தது பற்றி தோட்டத்தின் உரிமையாளரிடம் எப்போது நான் சொன்னனேன் என்றால் இந்த சம்பவம் நடந்ததற்கு மறுநாள் சொன்னேன். நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரியின் மீது கொண்ட முன்பகையால் அவருக்கு எதிராக பொய்யான வாக்குமூலம் அளித்து வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரி எங்களுக்கு எதிராக அளித்த புகாரை மறைப்பதற்காக பொய்யான வாக்குமூலம் அளிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**